கரூர் வேளாண்மை இணை இயக்குநர், அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு. ஆர். சிவசுப்ரமணியன், பி.எஸ்சி., (விவ).,

ந.க.எண். அ2/6621/2019 நாள்: 18 .03.2022

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு. ச. சுந்தரம் த/பெ. (லேட்) ஆர். சந்தானகிருஷ்ணன் - இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் 07.06.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடல் -

பார்வை:
1. சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி6/26559/2017 நாள்:17.07.2018
2. சேலம், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/6262/2018 நாள்:23.05.2018.
3. சென்னை வேளாண்மை இயக்குநரக வேளாண்மை கூடுதல் இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:அநிபி5/14291/2019 நாள் 14.08.2019
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்: அ2/6621/2019 நாள் 30.8.2019
5. அரசாணை (நிலை) எண். 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்: 26.02.2021.
6. சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண். அநிபி8/114215/2021 நாள்: 04.03.2022

************

ஆணை:

பார்வை 1-ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையில், கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் (தற்போது வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் அரவக்குறிச்சி) உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்து வந்தபோது 27.05.2003 அன்று அமரரான திரு. ஆர். சந்தானகிருஷ்ணன் அவர்களின் வாரிசுதாரரான மகன் திரு. ச. சுந்தரம் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்)-ஆகப் பணிநியமனம் வழங்கப்பட்டு சேலம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணைப்படி, வீரபாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் சித்தர்கோவில், துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் 07.06.2018 முற்பகல் பணியில் சேர்ந்தார்.

-த.பி.பா-

2) பார்வை 5-ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை) அவர்களின் செயல்முறை ஆணைப்படி, இம்மாவட்டத்திற்கு விருப்பத்தின் பேரில் மாறுதல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திரு. ச. சுந்தரம் என்பவருக்கு க. பரமத்தி, வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்)-ஆக பணிநியமனம் வழங்கப்பட்டு 06.09.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

3) இவரது நியமனம் முற்றிலும் தற்காலிகமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) பார்வை 5-ல் கண்ட அரசாணையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் 02.02.2016 முதல் 31.12.2019 முடிய கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை நியமன அலுவலரின் (Appointing authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் (One level higher than the appointing authority) வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் திரு. ச. சுந்தரம், இளநிலை உதவியாளர் (பிணையம்)-ஆக பணியில் சேர்ந்த நாளான 07.06.2018 முற்பகல் முதல், இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

5) இதனைத் தொடர்ந்து இவர் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் தனது இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர்பணியில் முடிக்க வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை முடிக்கவேண்டுமெனவும், பவானிசாகர் பயிற்சி முடித்த பின்னரே தனியருக்குத் தகுதிகாண்பருவம் நிறைவு செய்து ஆணையிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- ஆர். சிவசுப்ரமணியன்
வேளாண்மை இணை இயக்குநர்
கரூர்.

பெறுதல்
திரு. ச. சுந்தரம்
இளநிலை உதவியாளர் (பிணையம்)
வேளாண்மை விரிவாக்க மையம், க. பரமத்தி.
வழி: வேளாண்மை உதவி இயக்குநர் க.பரமத்தி
நகல்: வேளாண்மை உதவி இயக்குநர் க.பரமத்தி
நகல்: சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
நகல்: பணிப்பதிவேடு
நகல்: இருப்புக்கோப்பு நகல்: உபரி1

/ஆணைப்படி/

கண்காணிப்பாளர்

22/3/2022